**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 139/2017**

**Prosecution Witness: 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜ்குமார் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused absent.PFA.)

**20.07.2023**

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை மாநகர மத்திய நுண்ணறிவு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 17.11.2015 ம் தேதி 20.00 மணிக்கு ஆஸ்ட்டின்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருக்கும்போது கச்சம்மாள் என்ற மாயக்காள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 445/2015 பிரிவுகள் 420,468,471 இத.ச வின் படி வழக்கு பதிவு செய்தேன். மேற்படி அசல் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும். வழக்கினை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி**

இந்த வழக்கில் மொத்தம் 4 எதிரிகள் என்றால் சரிதான். இந்த வழக்கின் 4 வது எதிரி பொன்னுசாமி என்பவர் புகார் கொடுக்கப்பட்ட காலகட்டத்திலேயே இறந்துவிட்டார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த புகார் மாவட்ட குற்றப்பிரிவில் இருந்து அனுப்பப்பட்ட புகார் என்றால் இல்லை. புகாரோடு சேர்த்து ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.